வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர் : செங்கேணி பழனி

தேதி 09.02.2026 நேரம் மாலை 6.10 மணி

---

தலைப்புச் செய்திகள்

இந்தியாவும், செஷல்சும், புவியியல் ரீதியாக மட்டுமல்ல, வரலாறு, நம்பிக்கை, ஆகியவற்றால் இணைக்கப்பட்டுள்ளன என்று, பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

மாவோயிசம் உலகெங்கிலும் யாருக்கும் பயன் அளிக்காமல் அழிவை மட்டுமே பரப்பி உள்ளது என்று மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா கூறியுள்ளார்.

தொழிலாளர் குறியீடுகள் செயல்படுத்தப் படுவதை, தொழிலாளர்களும், முதலாளிகளும் வரவேற்பதாக, மத்திய தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் துறை அமைச்சர் டாக்டர் மன்சுக் மாண்டவியா கூறியுள்ளார்.

ஆசிரியர்களின் கற்பித்தல் திறனை மேம்படுத்துவதற்கான, மாநில அளவிலான பயிலரங்கு, இன்று காரைக்காலில் நடைபெற்றது.

---

மோடி 1 (7)

இந்தியாவும், செஷல்சும், புவியியல் ரீதியாக மட்டுமல்ல, வரலாறு, நம்பிக்கை, ஆகியவற்றால் இணைக்கப்பட்டுள்ளன என்று, பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார். இந்தியா, மற்றும், செஷல்ஸ் நாடுகளுக்கு இடையிலான இருதரப்பு உறவுகள் நிறுவப்பட்ட 50ஆம் ஆண்டு

நிறைவை ஒட்டி, இந்தியா வந்துள்ள செஷல்ஸ் அதிபர் டாக்டர் பேட்ரிக் ஹெர்மினி, பிரதமர் திரு. நரேந்திர மோடியை சந்தித்து கலந்துரையாடினார். இது குறித்த கூடுதல் தகவல்கள்.....

(வாய்ஸ்)

மோடி 2 (19)

(வாய்ஸ்)

செஷல்ஸ் அதிபராக பதவியேற்ற பிறகு, டாக்டர் பேட்ரிக் ஹெர்மினி, இந்தியாவிற்கு மேற்கொள்ளும் முதல் பயணம் இதுவாகும். சுகாதாரம், வானிலை ஆய்வு, மின்னணுவியல், தகவல் தொழில்நுட்பம், மற்றும், நல்லாட்சி உள்ளிட்ட பல்வேறு துறைகளில், 7 புரிந்துணர்வு ஒப்பந்தங்களில் இருநாட்டுத் தலைவர்களும் கையெழுத்திட்டனர். பின்னர் செஷல்ஸ் நாட்டிற்கு 175 மில்லியன் டாலர் சிறப்பு பொருளாதார தொகுப்பை அறிவித்த பிரதமர் திரு. நரேந்திர மோடி, செய்தியாளர் கூட்டத்தில் உரையாற்றினார். அப்போது பேசிய அவர், இந்த தொகுப்பு, சமூக வீட்டு வசதி, மின் இயக்கம், தொழில் பயிற்சி, சுகாதாரம், பாதுகாப்பு, மற்றும், கடல்சார் பாதுகாப்பு ஆகியவற்றை ஊக்குவிக்கும் என்று கூறினார். இந்தியாவில், செஷல்ஸ் குடிமைப் பணியாளர்களுக்கு பயிற்சி அளிப்பதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டதற்கு, பிரதமர் திரு. நரேந்திர மோடி மகிழ்ச்சி தெரிவித்துள்ளார். டிஜிட்டல் மாற்றத்திற்கான புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் கீழ், இந்த துறையில், இந்தியா தனது வெற்றிகரமான அனுபவத்தை செஷல்சுடன் பகிர்ந்து கொள்ளும் என்று பிரதமர் குறிப்பிட்டார். சுகாதாரத் துறையில் இந்தியா எப்போதும் செஷல்சுக்கு ஒரு நிலையான, மற்றும், நம்பகமான கூட்டாளியாக இருந்து வருகிறது என்றும், தரமான மருத்துவம், மருத்துவ சுற்றுலா, மற்றும், உள்கட்டமைப்பு மேம்பாடு ஆகியவற்றின் மூலம்,

மோடி 3 (4)

இருநாடுகளும் இணைந்து செயல்படும் என்றும் திரு. நரேந்திர மோடி பெருமிதம் தெரிவித்துள்ளார். இன்று மாலை, டாக்டர் பேட்ரிக் ஹெர்மினி,

குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு, மற்றும், குடியரசுத் துணைத் தலைவர் திரு. சிபி ராதாகிருஷ்ணன் ஆகியோரை சந்திக்கிறார்.

---------------------------

நாடாளுமன்றம் (17)

எதிர்கட்சிகளின் தொடர் அமளி காரணமாக, மக்களவை பிற்பகல் 2 மணி வரை ஒத்தி வைக்கப்பட்டது. இன்று காலை, அவை கூடியதும், 19 வயதுக்குட்பட்டோருக்கான உலகக் கோப்பையை வென்ற இந்திய கிரிக்கெட் அணிக்கு, அவைத் தலைவர் திரு. ஓம் பிர்லா பாராட்டு தெரிவித்தார். இந்திய அணியின் சாதனை, வரும் தலைமுறையினருக்கு தூண்டுகோலாக இருப்பதோடு, விளையாட்டுத் துறையில் சிறந்து விளங்க இது உந்து சக்தியாக இருக்கும் என்றும், கூறினார். இதனை தொடர்ந்து, அவைத் தலைவர், கேள்வி நேரத்தை தொடங்க முற்பட்ட போது, காங்கிரஸ், திரிணாமுல் காங்கிரஸ் உள்ளிட்ட எதிர்கட்சிகள், அவையின் மையப் பகுதிக்கு சென்று, அமளியில் ஈடுபட்டன. அவைத் தலைவர் அமைதிக் காக்கும்படி வேண்டுகோள் விடுத்தும் எதிர்கட்சியினர் தொடர்ந்து அமளியில் ஈடுபட்டதால், பிற்பகல் 2 மணி வரை, அவை ஒத்தி வைக்கப்பட்டது. மீண்டும் பிற்பகல் 2 மணிக்கு அவை கூடிய போது, திரு. ஓம்பிர்லா, மத்திய பட்ஜெட் மீதான விவாதத்தை மேற்கொள்ள முயன்றார். காங்கிரஸ் எம்.பி, திரு. சசி தரூரை, அவைத் தலைவர் பேச அழைத்த போது, வேறு பிரச்சனை குறித்து திரு. ராகுல் காந்தியை பேச அனுமதிக்குமாறு திரு. சசி தரூர் கேட்டுக் கொண்டார்.

நாடாளுமன்றம் 2 (11)

இதற்கு மறுப்பு தெரிவிக்கப் பட்டதால், அவைத் தலைவர் பல முறை வேண்டுகோள் விடுத்தும், மத்திய பட்ஜெட் மீதான விவாதத்தை மேற்கொள்ள முடியாததால், திரு. ஓம் பிர்லா நாளைக் காலை 11 மணி வரை, அவை ஒத்தி வைக்கப்பட்டதாக தெரிவித்தார். மக்களவை நடவடிக்கைகளுக்கு, காங்கிரஸ் தொடர்ந்து இடையூறு ஏற்படுத்துவதாக, நாடாளுமன்ற விவகாரங்கள் துறை அமைச்சர் திரு. கிரண் ரிஜிஜூ குற்றம் சாட்டினார். பின்னர், செய்தியாளர்களிடம் பேசிய அவர், காங்கிரஸ்

உறுப்பினர்களின் நடவடிக்கைகளால், குடியரசுத் தலைவர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீதான விவாதத்தை அவையில் எடுத்துக் கொள்ள முடியாமல் போனதாகவும், எதிர்கட்சியினரின் நடவடிக்கைகளுக்கு, அவைத் தலைவர் அதிருப்தி தெரிவித்ததாகவும் கூறினார்.

---------------------------

*அமித் ஷா* (18)

மாவோயிசம் உலகில் எங்கும், யாருக்கும் பயன் அளிக்கவில்லை என்றும், அழிவை மட்டுமே பரப்பி உள்ளது என்றும் மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா கூறியுள்ளார். சத்தீஸ்கரில் உள்ள, பஸ்தாரின் பிரதேச தலைமையகமான ஜக்தல்பூரில், இன்று நடைபெற்ற, பஸ்தார் பந்தம் விழாவின் நிறைவு விழாவில் உரையாற்றிய திரு. அமித் ஷா, ஆயுதப் போராட்டத்தை தொடரும் நக்சலைட்டுகள், தங்கள் ஆயுதங்களை கைவிட்டு, சரணடைந்து, சமூகத்தின் முக்கிய நீரோட்டத்திற்கு திரும்புமாறு, வேண்டுகோள் விடுத்துள்ளார். பழங்குடி சமூகங்களின் பாதுகாப்பை உறுதி செய்வதை நோக்கமாக கொண்டு, மத்திய அரசு செயல்பட்டு வருகிறது என்றும், திரு. அமித் ஷா கூறியுள்ளார். பஸ்தாரின் கலாச்சாரம், மற்றும், கலைகளை பாராட்டிய அவர், பஸ்தாரின் அடையாளம், துப்பாக்கி குண்டுகளில் இல்லை என்றும், மாறாக, அதன் வளமான கலாச்சாரம், மற்றும், பாரம்பரியத்தில் உள்ளது என்றும் கூறினார். பஸ்தார் பந்தம் விழாவில் நடைபெற்ற போட்டிகளில் வெற்றி பெற்ற முதல் 3 அணிகள், குடியரசுத் தலைவர் மாளிகைக்கு அழைக்கப்பட்டு கௌரவிக்கப் படுவார்கள் என்றும் கூறினார். நிகழ்ச்சியில், சத்தீஸ்கர் முதலமைச்சர் திரு. விஷ்ணு தியோ சாய், மற்றும், துணை முதலமைச்சர் திரு. விஜய் ஷர்மா ஆகியோர் கலந்து கொண்டனர்.

---------------------------

*மன்சுக் மாண்டவியா* (16)

தொழிலாளர் குறியீடுகள் செயல்படுத்தப் படுவதை, தொழிலாளர்களும், முதலாளிகளும் வரவேற்பதாக, அறிவிக்கப்

பட்டுள்ளது. நொய்டாவில் உள்ள, விவி. கிரி தேசிய தொழிலாளர் நிறுவனம் நடத்திய ஆய்வுக் கூட்டத்தில், தொழிலாளர்கள், மற்றும், முதலாளிகள் இடையே, நம்பிக்கை மற்றும் நேர்மறை உறவுகள் ஏற்பட்டுள்ளதாக தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்பு அமைச்சகம் தெரிவித்துள்ளது. சமூக பாதுகாப்பை வலுப்படுத்துவதற்கும், அவர்களின் உறவுகளை நெறிமுறைப்படுத்தவும், தொழிலாளர் அமைப்புகள் மூலம் இணக்கமான சூழ்நிலையை உருவாக்கவும், தொழிலாளர் குறியீடுகள், உதவிகரமாக இருக்கும் என்று மத்திய தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் துறை அமைச்சர் டாக்டர் மன்சுக் மாண்டவியா கூறியுள்ளார். தொழிலாளர் குறியீடுகளை செயல்படுத்துதல்-ஒரு கருத்து அடிப்படையிலான பகுப்பாய்வு என்ற தலைப்பிலான இந்த ஆய்வுக் கூட்டத்தில் உரையாற்றிய டாக்டர் மன்சுக் மாண்டவியா, தொழிலாளர் சந்தையில், சமூக பாதுகாப்பு, ஒழுக்கமான வேலை, மற்றும், நிலையான வளர்ச்சி ஆகியவை, இந்த தொழிலாளர் குறியீடுகளின் நோக்கம் என்று கூறினார்.

---------------------------

*அஷ்வினி வைஷ்ணவ் (14)*

புதுடெல்லியில் இருந்து, மிசோரமில் உள்ள சாய்ராங் மற்றும் சில்சார் இடையேயான, புதிய பயணிகள் ரயில் சேவைகளை, மத்திய ரயில்வே துறை அமைச்சர் திரு. அஷ்வினி வைஷ்ணவ் இன்று காணொலிக் காட்சி மூலம் கொடியசைத்து தொடக்கி வைத்தார். நிகழ்ச்சியில் உரையாற்றிய அவர், சில்சார், வடகிழக்கு பிராந்தியத்தில் மிக முக்கியமான மையமாகும் என்றும், சில்சார் - சாய்ராங்குடன் இணைக்கப் படுவதால், இந்த சேவை பயணிகளுக்கு பெரிதும் பயனளிக்கும் என்றும் அவர் கூறினார். தொடர்ந்து, ஊடகங்களுக்கு உரையாற்றிய அவர், பிரதமர் திரு. நரேந்திர மோடி தலைமையில், வடகிழக்கு பிராந்தியத்திற்கு 11 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பிலான ரயில்வே பட்ஜெட்டில் ஒதுக்கப் பட்டுள்ளதாகவும், தற்போது, இப்பகுதியில், 72 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்புள்ள திட்டங்கள்

நடைபெற்று வருவதாகவும் கூறினார். கடந்த 11 ஆண்டுகளில், வடகிழக்கு மாநிலங்களில் ஆயிரத்து 900 கிலோ மீட்டர் தூரத்திற்கு, புதிய ரயில் பாதைகள் அமைக்கப் பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

----------------------------

*காரைக்கால் 1 (5)*

மத்திய அரசின் தேசிய கல்விக் கொள்கை 2020-ன் ஒருபகுதியாக, ஆசிரியர்களின் கற்பித்தல் திறனை மேம்படுத்துவதற்கான, மாநில அளவிலான பயிலரங்கு, இன்று நடைபெற்றது. காரைக்காலில் உள்ள புதுச்சேரி தேசிய தொழில்நுட்ப நிறுவனத்தில் நடைபெற்றது. இதுகுறித்த கூடுதல் தகவல்கள்.....

(வாய்ஸ்)

*காரைக்கால் 2 (14)*

(வாய்ஸ்)

ஆசிரியர்களின் கற்பித்தல் தகுதியை, உலக தரத்திற்கு உயர்த்துதல், அனுபவம் வாய்ந்த கல்வியாளர்கள் மூலம், இளம் ஆசிரியர்களுக்கு வழிகாட்டுதல்களை வழங்குதல் ஆகியவை இந்த பயிலரங்கின் முக்கிய நோக்கமாகும். கேந்திரிய வித்யாலயா, ஜவஹர் நவோதயா மற்றும் மாநில அரசுப் பள்ளிகளில் இந்த திட்டங்களை நடைமுறைப்படுத்துவது குறித்து, இந்த பயிலரங்கில் எடுத்துரைக்கப்பட்டன. ஆசிரியர்களின் தொழில்முறை வளர்ச்சியை உறுதி செய்வதே, இந்த பயிலரங்கின் நோக்கம் என்று, இந்நிகழ்ச்சியின் ஒருங்கிணைப்பாளர்கள் தெரிவித்தனர். நிகழ்ச்சியில், என்ஐடி புதுச்சேரி இயக்குநர் திரு. மகரந்த மாதவ் கங்கரேக்கர் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்ச்சியில், காரைக்கால் முதன்மை கல்வி அலுவலர் விஜய மோகனா சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டார். இந்நிகழ்ச்சியில், தமிழ்நாடு, புதுச்சேரி, கர்நாடகா, மற்றும், அந்தமான்-நிக்கோபர் தீவுகளைச் சேர்ந்த சுமார் 150க்கும் மேற்பட்ட பள்ளி முதல்வர்கள், தலைமை ஆசிரியர்கள் பங்கேற்றனர்.

----------------------------

*விக்சித் பாரத்-ஏனாம்* (12)

புதுச்சேரி பிராந்தியத்தைச் சேர்ந்த ஏனாமில் உள்ள டாக்டர் சர்வபள்ளி ராதாகிருஷ்ணன் அரசு கலைக் கல்லூரி மற்றும் டாக்டர் பி.ஆர் அம்பேத்கர் அரசு பாலிடெக்னிக் கல்லூரி ஆகிய கல்லூரிகளில், இன்று, விக்சித் பாரத் யுவ இணைப்பு நிகழ்ச்சி, இன்று நடைபெற்றது. 2047ஆம் ஆண்டிற்குள், வளர்ந்த இந்தியா என்ற தொலைநோக்குப் பார்வையில், இளைஞர்கள் மற்றும் மாணவர்களை ஈடுபடுத்த, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு அமைச்சகம் இந்நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்திருந்தது. சிறப்பு பங்கேற்பாளர்களாக கீர்த்தி யோவா, மற்றும், குமார் ராஜா ஆகியோர் நிகழ்ச்சியில் உரையாற்றினர். மேலும், கல்லூரி முதல்வர் டாக்டர் சாந்தகுமார், பாலராஜு சுவாமி ஆகியோர், நிகழ்ச்சிக்கு தலைமைத் தாங்கினர். நாட்டு நலப்பணித் திட்ட அதிகாரிகள், டாக்டர் ஸ்ரீனிவாஸ், கே. தாதாராவ் மற்றும் மாணவர்கள் நிகழ்ச்சியில் பங்கேற்றனர்.

----------------------------

*பரிக்ஷா பே சர்ச்சா* (13)

மாணவர்களின் தேர்வு அச்சத்தை போக்கவும், அவர்களது மன அழுத்தத்தை குறைக்கவும், பிரதமர் திரு. நரேந்திர மோடி இன்று காணொலிக் காட்சி மூலம் மாணவர்களுடன் கலந்துரையாடினார். பரிக்ஷா பே சர்ச்சா நிகழ்ச்சியின் 9 ஆவது பதிப்பின் 2ஆவது கட்டமாக, உரையாற்றிய பிரதமர், தொழில் முனைவோர் பாதையை மாணவர்கள் தேர்ந்தெடுக்குமாறு வலியுறுத்தினார். சிறிய அளவிலான ஸ்டார்ட்-அப் நிறுவனங்களை தொடங்கவும், அவர் ஊக்கப்படுத்தினார். பாடப் புத்தகங்களுக்கு அப்பாற்பட்டு, செயல்முறை நடவடிக்கைகளில் மாணவர்கள் தங்களை ஈடுபடுத்தி கொள்ள வேண்டும் என்றும், ஒழுக்கமும், உத்வேகமும், மாணவர்களுக்கு மிக அவசியம் என்றும் பிரதமர் கூறினார். தொடர்ந்து பேசிய பிரதமர், உள்ளூர் உற்பத்திகளின் முக்கியத்துவத்தை எடுத்துரைத்து, அதன் மூலம், நாட்டின் பொருளாதாரம் வலுப்பெறுவதையும் சுட்டிக் காட்டினார்.

----------------------------

*விளையாட்டு (7)*

புதுடெல்லியில் இன்று நடைபெற்ற, ஆசிய பிஸ்டல் சேம்பியன் ஷிப் போட்டியில், பெண்களுக்கான 25 மீட்டர் பிஸ்டல் அணி பிரிவில், இந்திய வீராங்கனைகளான ஈஷா சிங், மனு பாக்கர், மற்றும் ரிதம் சங்வான் ஆகியோர் தங்கப் பதக்கம் வென்றுள்ளனர். இந்திய அணி, மொத்தம் ஆயிரத்து 751 புள்ளிகளுடன் முதலிடத்தில் உள்ளது. சீன தைபே, ஆயிரத்து 735 புள்ளிகளுடன் வெள்ளிப் பதக்கத்தையும், வியட்நாம், ஆயிரத்து 729 புள்ளிகளுடன் வெண்கலப் பதக்கத்தையும் வென்றன.

---------------------------

*மீண்டும் தலைப்புச் செய்திகள்*

இந்தியாவும், செஷல்சும், புவியியல் ரீதியாக மட்டுமல்ல, வரலாறு, நம்பிக்கை, ஆகியவற்றால் இணைக்கப்பட்டுள்ளன என்று, பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

மாவோயிசம் உலகெங்கிலும் யாருக்கும் பயன் அளிக்காமல் அழிவை மட்டுமே பரப்பி உள்ளது என்று மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா கூறியுள்ளார்.

தொழிலாளர் குறியீடுகள் செயல்படுத்தப் படுவதை, தொழிலாளர்களும், முதலாளிகளும் வரவேற்பதாக, மத்திய தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் துறை அமைச்சர் டாக்டர் மன்சுக் மாண்டவியா கூறியுள்ளார்.

ஆசிரியர்களின் கற்பித்தல் திறனை மேம்படுத்துவதற்கான, மாநில அளவிலான பயிலரங்கு, இன்று காரைக்காலில் நடைபெற்றது.

இத்துடன் இந்த செய்தி அறிக்கை நிறைவு பெறுகிறது